729

Register No. 2183.

உ

ஓம் தத்ஸத்.

ஸமரஸம்.

ஓர் தமிழ் மாத வெளியீடு.

செயற்பால தோருமறனே யொருவன்
குயற்பால தோரும்பழி—குறள்.

ஸமரஸ செல்வி	சித்திரை-மீ April. 1936	வயது 2. மாதம் 2.

வருட சந்தா:— உள் நாட்டுக்கு ரூ. 1—0—0,
வெளிநாட்டுக்கு ரூ. 1—4—0.

Edited & Published by:—
M. A. Varadaraja Mudaliar.

PRINTED AT THE S R V. PRESS, VILLUPURAM.

14 MAY 1938
MADRAS

சமய வாழ்வு.

மனிதன் இன்றையபோழ்து எந்த நிலைமையிற் நிற்கின்றான்; அவனது நாகரீகம் எத்துறையில் மேன்மைபெற்று விளங்குகின்றது; அவனது வாழ்க்கையின் வெற்றியென்ன? அவன் உயிர்களுக்கு செய்யும் தொண்டென்ன வென்பதை யாராய்வோம்.

மனிதனது சற்கால நாகரீகத்தின் உயர்வும் தாழ்வும் அவனது மன இறுமாப்பும், அவன் மற்றவர்களிடத்தில் காட்டும் மரியாதைக் குறைவான அகம்பாவமும், ஒருவரை யொருவர் வஞ்சிக்கவும் அடிமைப்படுத்தவும் கற்றுக்கொண்ட உபாயமும், இளமைதொட்டு உடலை உழைத்து வாழ்வதை மறந்து சோம்பேறிகளாய் அடிமை வாழ்விலீடு பட்டிருப்பது மல்லாமல் அடிமைவாழ்க்கையே மனித வாழ்க்கையின் முடிவெனக்கருதி தானடிமையென்பதை மறந்து மற்ற உயிர்களிடத்து காட்டும் சீற்றமும் மனச்செறுக்கும் சவசந்தோஷத்தையும் கூறுதற்கு முன்னரே அவர்களுடைய ஆரம்ப நிலையிலிருந்து அவர்கள் தற்காலம் அடைந்துள்ள உன்னத நிலமையை அளவிட்டுப் பார்ப்போம்.

ஆரம்பகாலம்:- ஆரம்பத்தில் மனிதன் நிர்வாணகோலமாக ஜீவித்திருந்ததாகவும், காய்கனி கிழங்குகளை தின்று சுனை, ஓடை நீரை பானம்செய்து வந்ததாகவும் பொதுவாய் அவன் இயற்கை வாழ்விலீடுபட்டு வந்ததாகவே வேதம் கூறுகின்றது.

தற்காலம்:- பின்னர் இலை தழைகளை கட்டிக்கொண்டு பிராணிகளின் தசைகளை சுட்டு கற்களினால் பிய்த்தும் உண்டும் தேன் மது முதலிய பானங்களை கண்டுபிடித்து குடித்தும், குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வாழ்ந்து வந்தார்கள்.

செயற்கைகாலம்:- இதை ஆயுத காலமென்றும் சொல்லுவார்கள்' இயற்கைநிலைமையை வெறுத்து என்றைக்கு செயற்கை ஆகாரம் உடைகளை மனிதன் சேகரம் செய்ய ஆசைப்பட்டானோ அதிலிருந்து ஓலைகளால் குடிசைகளும், இரும்பு செம்பு பித்தளை முதலியவைகளால் பலவித ஆயுதங்களும் கனிமரங்களையும் நட்டுப் பயிரிடு முறைகளையும் தோல் நாரினாலும் பலவித உடைகளை தயா

ரித்துக்கொண்டார்கள். அவர்களில் முன்னோர்களின் அனுபவங்களை கதைகளாக பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தார்கள்.

ஆராய்ச்சிகாலம்:- அதிலிருந்து பாஷைகள் ஆரம்பிக்கப்பட்டு பலவித விஷயங்களில் ஆராய்ச்சிசெய்யத்தலைப்பட்டார்கள் பயிரிடுதல், குடிசை கட்டல் பலவித கைத்தொழில் மண், மரம், கல் முதலியவைகளால் சிற்பங்களை செய்தார்கள் பலவித உலோகங்களால் பலவித சாமான்களும் செய்து உபயோகப்படுத்தியதோடு கல்வி கற்பிப்பது, பஞ்சாயித்து பேசுவது முதலிய வழிகளை கண்டுபிடித்தார்கள். இதற்கு அபோதகாலம் என்றும் சொல்லுவார்கள்.

அக்ஷரகாலம்:- கல்வெட்டுகளாலும் செப்புத்தகடுகளாலும் ஓலைகளாலும் பலவித பாஷைகளை கண்டுபிடித்துவந்தார்கள். நாகரீகம் பெருக பெருக அரசாங்கத்தை பஞ்சாயித்து சபைகளாக வகுத்துக்கொண்டார்கள். சமூதாய காலங்களில் அரசர்கள் புறப்பட்டார்கள். அவர்களுக்கு பிறகு இலக்கணகாலம் என்று சொல்லுவார்கள். பிரஜைகளுக்கு வேண்டிய எல்லாவித சௌகரியங்களையும் கண்டுபிடித்து அவைகளை உற்சாகத்தோடு செய்துவந்தார்கள். பின்னர் அரசனது உதவியால் கவிவாணர்களும் வித்வான்களும் பலவகை சாஸ்திரங்கள் புராணங்கள் நீதி நூல்கள் இலக்கண இலக்கியங்கள் கோவில்கள் சிற்பங்கள் பஞ்சுகளால் வஸ்திரங்கள் முதலிய சகல நாகரீகப்பொருள்களும் கண்டுபிடிக்கத்தலைப்பட்டார்கள்.

ராஜாக்கள் காலம்:- இதனை ஞானகாலம் என்றும்சொல்லலாம். சகல சாஸ்திரம் சகல கைத்தொழில் சகலவிதமான நீதிசாஸ்த்திரம், ஆசாரம், நல்லொழுக்கம் சன்மார்க்கங்களிலும் ஜனங்களை பழக்குவித்து அவர்களுக்கு பலவழிகளிலும் உதவி புரிந்து வந்தார்கள். இக்காலத்தில் தான் ஞானம் ஓங்கிவளர்ந்தது. அதன் ஒளி மனித சமூகத்துக்கு தொண்டு செய்துவந்தது. அவர்களை முன்னேற்றவும், அறிவு புகட்டவும், உதவி செய்யவும், அரசாங்கமும் அறிவாளிகளும் ஆயிரத்தாலும் முயன்று முயன்று நாகரீக ஸ்தம்பத்தை கட்டிவந்தார்கள். ஞான ஒளி வீசிவந்த

அக்காலங்களில் அரசாங்கம் சமரஸ முறையில் நடந்தேறின அரசர்கள் சத்திய சந்தர்களாக தெய்வபக்தியில் முழ்கியிருந்தார் கள். அரசனே எல்லா விவகாரங்களையும் நேரிலேயே பைசல் செய்து வந்தான். அற்ப விஷயங்களை ஜாதி கட்டுப்பாட்டான பஞ் சாயத்து சபைகளால் தீர்த்துவந்தான். சமூக ஒற்றுமை நிலவி வந்தது.

சத்தியம் ஜெயக்கொடி வீசிவந்த ஞான்று அரசனும் குடி களும் சர்வம் தெய்வமயமென கருதி ஆசையை அறுத்து குதூக லமாக ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும், நோயாளிகளுக்கும் பலஹீனர்களுக்கும், வேண்டிய உதவி பலபுரிந்து காப்பாற்றிவந் தார்கள். தொழிலாளர்க்கு அக்ஷயதூணி வழங்கி வந்தார்கள் (நீங்காத வருமானம்.) சமய அனுட்டான நியமங்களெல்லாம் என்றும் மறவாது உலகம் போற்றி ஞாபகப்படுத்தி நடக்குமாறு உருவமைப்பு திட்டத்தை குளங்களிலும், கோவில்களிலும், வீடு களிலும், திருவிழா, பண்டிகைகளிலும் அமைத்து வந்ததோடு சூக்ஷம அர்த்தத்தோடு கூடிய ஆசார அனுட்டானங்களெல்லாம் சிந்திக்க ஆனந்தத்தையும், பார்க்க பார்க்க அழகையும் கொடுத் துவந்தன.

தற்காலம் அப்படிப்பட்ட உயர்ந்த நோக்கங்களும், சன் மார்க்க கூட்டங்களால் திருவப்பட்ட சமய வாழ்க்கைகளும் அழுகி நாற்றமெடுத்தன்றோ போய்விட்டன. இதற்கு பலநாட்டி னரின் கூட்டுறவால் வந்த நாசமாகும். இதற்கு கழுதையும், மகனும், கிழவனும் என்னும் கதைபோன்று ஒருவரை யொருவர் திருப்திசெய்ய முயன்று மூவரும் மாண்ட வாலாறே. தற்கால நாக ரீகத்தின் பயன். ஞான நாகரீகம் மாய்ந்து விட்டது. மேனா ட்டு நாகரீக சூழ்ச்சி புன்சிரிப்போடு ஆடுகிறது. ஒழுங்காக நடந்த ஜாதிக்கட்டுப்பாட்டின் சமய நிர்வாகங்களெல்லாம் ஏதோ சில் லரை அபிப்பிராய பேதகங்களுக்காக தாங்கள் தீர்த்து விடுவதாக சொல்லி உயர்ந்த சம்பளங்களை கொடுத்து அவர்கள் மூல்யமாய் நீதி வழங்கிவந்தார்கள். எத்தனைபேருக்கு ஒருவர் நியாயம் வழ ங்கமுடியும்? 10 பேருக்கு நியாயம் வழங்கி 100 பேர்வாயில் அவர் கள் பணத்தை பிடுங்கிக்கொண்டு மண்ணைப்போடவேண்டிய நிலை

மையாய்விட்டது. உத்தியோகஸ்தரை நம்பியே மௌடீக ஜனங்கள் ஒருவரை யொருவர் மதிக்காமலும் தாய் தசப்பன் பிள்ளை முதலியவர்களிட மரியாதையும் ஒழுங்குகளையும் மறந்து சர்க்கார் கையை நியாயத்திற்கு எதிர்பார்க்கிறார்கள். பெண்ஜாதி புருஷன் சண்டைக்கும் மனஸ்தாபத்திற்கும் சர்க்கார் சமாதானம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதென்றால் மற்ற உறவின்முறையாரும் பொதுஜனங்களும் எவ்வளவு தூரம் மனம் பிளவுபட்டு சொத்து சுதந்திரங்களை இழந்து அநாதைகளாய் திரிகிறார்களென்பதை எப்படி வர்ணித்தெழுத முடியும். என் அப்படி? ஆதி காலத்தில் முதியோர்களால் ஏற்படுத்தியஜாதி கட்டுப்பாடு, சமய கட்டுப்பாடு, குடும்பக் கட்டுப்பாடு, ஊர்க்கட்டுப்பாடு இவைகளை வெறுத்து அரசனை நம்பி புருஷனை கைவிட்டவாறுபோல் சகலத்திற்கும் அரசாங்கத்தாரின் கையை எதிர்பார்த்ததேயாகும். கைத்தொழில் சாமான்களும் அப்படியே முதலில் சுலபமான விலையில் சாமான்களை கொண்டுவந்து நிரப்பி விடுவதும் பிறகு பாமர ஜனங்கள் அதின்பேரில் மோகமாகி சுதேச கைத்தொழில்களை அநாதரவு செய்து வந்ததால் கைத்தொழில்கள் பட்டுபோய்விட்டது. ஆகாரம், உடை, பானம், பிரயாணவர்கனம், சகல வீட்டு சாமான்கள், விளக்கு எல்லாம் மேனாட்டிலிருந்து விகியோகித்து வருகின்றன போதாத குறைக்கு சமய சமூதாய விஷயங்களையும் மேனாட்டு மிஷன் பிரசார சபைகளால் பங்கப்படுத்தி வருகிறார்கள். எப்படியானாலும், ஜனங்களை பொருப்பாக காப்பாற்றும் வசதிகளேதேனுமுண்டா? அதுதானில்லை மேனாட்டாரில் வழங்கப்படும் நீதி, சமுதாய விஷயங்கள், கைத்தொழில், சமரஸபான்மை இவைகள் அவர்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ சுயநலமாக நடப்பதனால் இந்நாட்டு சமயமணம் எந்நிலையிலுள்ளதென்பது சொல்லாமலே விளங்கும். கால்வயிற்று ஆகாரமே கிடையாத மக்களிடை. சமயஞானத்தை காண்பதெப்படி? பொய், சூது தன் சதையை அடகு வைக்கவும், தன் சகோதரனை காட்டிக் கொடுப்பதும், அனாசாரம், துன்மார்க்கம் முதலிய தீய செய்கைகளில் ஈடுபட்டு மூலைபல சண்டையில் ராக்ஷதர்களே ஒருவர்க்கொருவர் மாண்டதைப்போல் மடிகிறார்கள். நியாயம் என்ன! வெளிநாட்டின் பாசக்கயிரால் மக்கள் கட்டுப்பட்டு மெய் மறந்திருப்பதேயாகும்.

இங்கிலையில் மக்கள் மேல்நாட்டு பாசத்தை தறிப்பதற்கு நன்கு யோசித்தல் வேண்டும் இதற்கு முதலாவது திருப்பணி ஜாதிக்கட்டுப்பாடேயாகும். இந்த ஒரு ஆயுதத்தால் சகல கட்டுகளையும் முறித்தெரிந்துவிடலாம். இதற்கு பழைய காலத்தில் கையாண்ட ஜாதி சமய ஊழல்களை நீக்கி ஒவ்வொரு ஜாதியும் ஜனங்களுக்கு தொண்டுசெய்யும் முறைகளை கையாள ஒன்றுபட வேண்டும். செல்வத்திலும், சாயக்காலிலுமுள்ளவர்கள் யதேச்சாதிகாரமாக தாங்களே பஞ்சாயத்து தலைவர்களாக இருந்து ஊதியத்தை பெறவேண்டுமென்கிற பழைய கனவுகளை நீக்கி வருஷவாரியாக ஒவ்வொருவருக்கும் காரியஸ்தர் பதவிகளை ஈதல் வேண்டும் பொது ஜனங்களெல்லாம் கூடி ஒருவரை திறமையிலும் உண்மையிலும் வல்லவர்யென கருதி அவரையே மறுபடியும் இருக்க ஜனங்கள் கோரினாலொழிய மற்றப்படி ஏழை, புத்தியுள்ளவன் அவிவிவேகி செல்வர் முதலியவர்களில் கலந்து ஐந்துக்கு மேற்பட்ட நபர்களின் மூல்யமாய் பஞ்சாயத்தை ஆரம்பியுங்கள் ஜாதிப்பஞ்சாயத்துக்கு கட்டுப்படாதவர்களை நீக்கி கட்டுப்படும் குடிகளிடமிருந்து பிரமாணப்பத்திரிகையை எழுதி வாங்கிக் கொண்டு அந்த கட்டுப்பாட்டில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

ஜாதிக்கட்டுப்பாட்டைப்பற்றி நவீன நாகரீகத்தில் மூழ்கியவர்கள், இதேது இந்த பழைய கட்டுப்பெட்டியை திறந்துவிடுகிறாறென ஏளனம் செய்ய தலைப்படுவர். கலப்பு விவாகம் போஜனம் இஃது ஆதிகாலத்தில் வேறு உருவந்தாங்கி வந்துள்ளது. அதாவது எண்வகை விவாகங்களின் மூல்யமாய் இந்த சமரஸம் பரவியிருந்தது. தற்காலமும் இஃது நடைபெற்றே வருகின்றது. எதிர்காலத்திலும் காலச்சக்கிரத்தின் வேகத்தால் இஃது வேகமாகச்செல்லுமென்பதில் ஐயமில்லை. இரண்டாகவதாக ஆங்கில ஆக்ஷியின் சட்டதிட்டங்கள் இதனை பாதிப்பதாயில்லை. மூன்றாவதாக திருராஜ கோபாலாச்சாரியார் அவர்கள் என்று ஸ்ரீ காந்தியடிகளின் செல்வனுக்கு தமது குமாரத்தியை தந்து சமரஸப்படுத்தினாரோ அப்பொழுதே பழைய கொள்கைகள் நாசமாக்கப்பட்டன.

சமரஸ விவாகத்தாலும், சமபந்தி போஜனத்தாலும், பலவித நன்மைகளிருக்கின்றன. காம சாஸ்திரப்படிக்கும், சாமுத்

திரிகாலக்ஷணப்படிக்கும் எளிதில் ஜதை பிரிக்கலாம். இது உத்தம பிரஜா உற்பத்தியை வளர்ப்பதாகும். சமபந்தி போஜனத்தாலும் வேற்றுமை நீங்கி ஒன்றுபடுத்துவதற்கான ஆஸ்பதமாய் இருக்கின்றன. ஜாதிக்கொடுமைகள் நம்நாட்டில் என்னென்ன தீவினைகளை விளைவித்திருக்கிறது என்பது குன்றின்மேலிட்ட விளக்கு ஆயினும் கண்ணைக்கெடுத்த தெய்வம் கோலைக் கொடுக்காதா? என்றபடி மறுபடியும் இந்தஜாதிக்கட்டும்பாடே மக்களுக்கு நன்மைபயக்குமென்பதற்கு மேல்நாட்டிலும், நம்நாட்டில் சென்னை முதலிய பெரிய நகரங்களில் ஏற்படும் சமரஸ வாழ்க்கையிலுமிருந்து பாடங்கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஆகையால் இந்த புதிய ஜாதிக்கட்டுப்பாட்டை கண்டு பயந்துவிடக்கூடாது. இதனை அந்தந்த வகுப்பிலுள்ள அறிவாளிகள் அந்தந்த வகுப்பை சீர்த்திருத்த முன்னுக்கு வரவேண்டும். ஜாதிச்சமய ஊழல்களெல்லாம் களைந்து விடவேண்டும். ஒவ்வொரு வகுப்பும் உயர்ந்த நோக்த்தை தாங்கியது என்று எண்ணிக்கொண்டால் இந்த சாதி ஒற்றுமையை கெடுத்துவிட வேண்டிய அவசியமிராது.

ஜாதிக்கட்டுப்பட்டால் பலவித நன்மைகள் உள்ளன. அவை நீதி, மனித உரிமை, ஜீவாதாரமான மூலப்பொருள்கள் வாழ்வின் மூல கொள்கைகள் இவைகளை உலகத்தின் விகாஸமுறையில்பெற்று மக்களுக்கு பிரித்துக்கொடுக்கக்கூடிய வசதி இதிலுண்டு சமூகக் கட்டுப்பாடான பஞ்சாயித்து சபைகள் சங்கங்கள் முதலியவைகளெல்லாம் மக்களுக்கு யோசனை கூறுவதாயும் புத்தி புகட்ட கூடியதாயுமிருக்குமேயொழிய இத்தொழில்புரியும் ஒருவனை கட்டுமானத்தின்கீழ் கொண்டுவருவது மிகத்தொல்லபம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் வசிக்கும் ஓர் ஊரில் செல்வ நிலைமையையும் மற்றும் பல சௌகர்யங்களையும், விநியோகிப்பதில் பணக்காரர்களும் முன்னிலையிலிருப்பவர்களுமே பங்கிட்டுக்கொள்வார்கள். ஆகையால் அரசியல் துறையில் வகுப்புவாரித்திட்டம் எத்துணை நலமுடையதோ அத்துணை சமயவாழ்க்கையிலும் ஆதரிக்கவேண்டும் இவ்வித ஜாதிக்கட்டுப்பாடு உலகத்தில் பல தேசங்களிலுமிருக்கின்றன. ஆனல் விவாகம், உணவு முதலியவைகளில் அவர்கள் பேதம் கொள்வதில்லை.

வாலிபர்கள் பீடி, சுருட்டு, கள், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களை மட்டின்றி அபிரிமிதமாக உபயோகப்படுத்திவருவதும் ஜாதிக்கட்டுப்பாடில்லாததும் ஓர் காரணமாகும். சாதாரண ஜனங்கள் ஜாதி அபிமானத்திற்குப் பயப்படுவார்களேயொழிய வேறுவித உபதேசங்களுக்கு கட்டுப்படமாட்டார்கள், சுபாசுப காரியங்களுக்கு ஜாதியர்களின் கூட்டுறவு வேண்டியிருப்பதால் அவர்கள் கடிந்துக்கொள்ளுதலுக்கும், ஆணைக்கும் கட்டுப்பட்டு நடப்பது இந்நாட்டு சம்பிரதாயம். இவ்வித கட்டுமானம் தற்காலமிருந்திருக்குமாகில் வெளிநாட்டு சாமான்கள் விற்கும் கடைத்தெருகளாக நம் நாடு விளங்குமா? ஒற்றுமையென்னும் பீரங்கி நம்மிடத்தில் இல்லாமல் போகுமா? ஆகையால் ஒரு ஜாதியரை மற்றொருவர் இழிவு படுத்தவோ, அவமதிக்கவோ, அடிமைப்படுத்தவோ முடியாமல் ஒரு வகுப்பாரைவிட மற்றொரு வகுப்பார் கல்வியிலும் உத்தம நாகரீகத்திலும், தர்மத்திலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்குவதற்கு பள்ளிக்கூட வகுப்புகளாக விளங்குவதே காரணமாகும்.

வகுப்பு வித்தியாசம்:- சமரசத்திட்டத்திற்கு யாதொரு பங்கம் விளைவித்ததில்லை. இனி விளைவதுமில்லை ஒவ்வொரு மனிதனும் தந்நலங்கருதி அர்த்தத்தை அநர்த்தம் செய்து சுயநலத்தை புகுந்துவிடுவதினால் வகுப்புச்சண்டையும், சமயச்சண்டையும், சாமிச்சண்டையும் எழுந்து உண்மையை குலைக்கின்றன.

தவிர இந்த ஜாதி கட்டுப்பாட்டை மறுபடியும் சுத்தி செய்வதினால் ஜாதிப்பாசத்தில் கட்டுண்டிருக்கும் பழையகால தர்மிகளுக்கு மனச்சாந்தியை உண்டாக்குமாகும். ஓர் சார்பாரால் ஒற்றுமைக்கு பங்கம் விளைவதை அறிவாளிகள் கவனித்து அவர்களோடு சேர்ந்து தாழ்வதற்குறிய ஓர் திட்டத்தை வகுக்க வேண்டும்

ஜாதி வித்தியாசத்தை யொழித்து சமரஸப்படுத்துவதாலும் இந்த திட்டத்துக்கு ஜனங்கம் வந்துவிடுமாகில் பல நன்மைகள் வந்து புதிய பல தீமைகளை உண்டாக்கிவிடும் அப்பொழுது பணக்காரர்களும் போலி அறிவாளிகளுமே உலக பொருளாதார விஷயங்களையும், மற்றும் சகல யோகங்களையும் கொள்ளையடிப்

பார்கள். உழைப்பாளிகளுக்கும், உத்தம அறிவாளிகளுக்கும், சமரஸ திட்டத்தில் பங்கு கிடைக்குமென்பதை எதிர்பார்ப்பதற்கில்லை. ஜாதி கட்டு என்றும் முறையால் உத்தியோகங்கள் சுகாதார வசதிகள் இவைகளை பாகித்து கொள்ளலாம். சமயவழிகளில் பொருளாதாரநிலை, விவாகம், போஜனம் இவைகளை ஏழைகளுக்கும் யாகிப்பதற்கு வசதியிருக்குமென்பது அனுபவ விஷயமாய் தோன்றுகிறது. ஆகையால் ஆதிதிராவிடர்களை பிராமணர்களென்று அவர்களும் மற்றவர்களும் எண்ணிக்கொண்டு தீண்டாமையை நீக்கிவிட்டால் போட்டி விவகாரம் அதிகமாயிருக்காதென்பது நிச்சயம்.

ஆகையால் சகோதரர்கள் இந்நாட்டின் சமய வாழ்க்கையை ஒழுங்கு படுத்தவும் அதனை உலகத்து மற்ற சமயங்களைவிட சிறந்துவிளங்கவேண்டுமென எண்ணம் நம்மிடையே இருக்குமாகில் அது ஒரு மனிதன் அல்லது சிலருடைய முயற்சியினாலும், ஒழுக்கத்தினாலும் பூர்த்தியடையப்போவதில்லை. அல்லது தற்பொழுது நமக்கு புத்தி புகட்டிய புதிய ராஜப்பிரதிநிதி லில்லித்தோ பிரபு அவர்களின் ஆர்வத்தினாலும் பெருமுயற்சியினாலும் இந்த சமரஸ திட்டம் பூர்த்தியடையப்போவதில்லை. அவர் கோருகிறபடி எல்லோரும் ஒத்துழைத்து பரஸ்பரம் நல்நம்பிச்கையோடும் நல்நெறியோடும் சமயவாழ்வை ஒவ்வொருவரும் வளர்ப்பிப்பார்களானால் எல்லாவித கஷ்டங்களும் அடியோடு மறைந்துவிடும்.

சமய வாழ்க்கையின் உட்பகுதிகளை ஆயிரம் பக்கத்துக்கு மேல் வெளியிடவேண்டியிருக்கிறது. அவைகள் விவரமாக பிறகு வெளிவரும் அடுத்த பத்திரிகையில் சமூக பகுதியாகிய ஜன தீர்மானத்தின் விவரங்களை விவரிப்போம்.

அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

அன்புடையீர்! சர்க்கார் உத்திரவு பெருவதற்காக நாள் பல நீடித்தது. இனி பிரதி மாதமும் முதல் தேதியில் ஒழுங்காக பத்திரிகை வெளிவரும். அன்பர்கள் பெருமனங்கொண்டு சந்தா தொகையை ஏஜண்டுகளிடம் செலுத்தி ஆதரிக்ககோருகிறேன். சந்தாதாரர்கள் கல்விதர்மமாக பாவித்து கபடற்ற முறையில் சிரமமன்னிபில் எவ்வளவுதூரம் சந்தா செலுத்திவருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு பெரிதாகவும் ஒழுங்காகவும் வெளிவரும் என்பதை மறக்கக்கூடாது.

நமது சமரஸச்செல்வி இனி கூடலூர் புதுப்பட்டணத்தில் உயர்திருவாளர் தேவஜூதசாமி அட்வோகேட் அவர்களின் ஆதரவிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு மாதமும் தமிழ் முதல்தேதியன்று ஒழுங்காக வெளிவரும்.

அன்பர்கள் அனைவரும் சந்தாவும், பொருளுதவியும், கொடுத்துதவியும், ஆயுள்சந்தாதாரர்களாகசேர்ந்தும் இச்சமரசச் செல்வியை வளர்க்க கோருகிறேன்

பத்திரிகையை அதிக பக்கங்களோடு வெளிவருவதற்கெல்லாம் தங்கள் சந்தா தொகையே உயிர்நாடி. ஆகையால் சந்தாதாரர்கள் குதர்கத்தையொழித்து சந்தேகம் தெளிந்து கல்வி தர்மத்தை நிலைநாட்ட முன்வருவதே தங்கள் கடமையென நன்குணரல் வேண்டும்.

மேல்நாடுகளில் ஏராளமான பொருள்களை தர்மத்திற்காக செலவிட்டு அங்கு எஞ்சியபொருளைக் கொண்டும் இந்நாட்டில் பல மிஷின்கள் மூலம் கல்வியை பரப்பும்போழ்து நம்நாட்டார் இனியும் தூக்கத்திலேயே இருக்கலாமா? விழியுங்கள்! விழியுங்கள்! பத்திரிகைகளை ஆதரியுங்கள்.

உதவி ஆசிரியர் பண்டிதர் திருநெல்வேலி தி. மு. தாஸ்

கௌரவ மேனஜர்,

P. சாரங்கபாணி,

திருப்பாப்புலியூர்.